# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C.174/2025 Date : 04.03.206 P.W. 2/Lw3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | தலைமை காவலர் |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 34 |
| 1,2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் . | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை..**

1. நான் தற்சமயம் களமருதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். நான் எ.கோட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது கடந்த 14.02.2024 அன்று இரவு 10.00 மணியளவில் உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் தலைமையில் நானும், தலைமை காவலர் ராமலிங்கம் என்பவரும் இரவு ரோந்துபணிக்காக சென்றபோது உதவி ஆய்வாளர் திரு. ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கு கூத்தனூர் கிராமத்தில் உள்ள ஏரியில் வண்டல்மண் அனுமதி இன்றி எடுப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கூத்தனூர் ஏரிக்கு 15.02.2024 அன்று அதிகாலை 1.00 மணியளவில் சென்றபோது ஏரியினுள் ஒரு ஜேசிபி இயந்திரத்தின் மூலம் டிப்பரில் மண் அள்ளிக்கொண்டிருந்தார்கள். மண் அள்ளிய இடத்தில் சென்றபோது ஜேசிபி இயந்திரத்தின் ஓட்டுநர் எங்களை கட்டதும் தப்பி ஓடிவிட்டார். டிராக்டரின் ஓட்டுநர் அந்த இடத்தில் இருந்தார். அவரை விசாரித்தபோது அவர் பெயர் மெர்வின் என்றும், எறையூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் கூறினார். டிராக்டரை பரிசோதித்த போது அதில் 1 யூனிட் வண்டல் மண் இருந்தது. அது அரசு அனுமதி இன்றி எடுக்கப்பட்டது. காவல் ஆய்வாளர் ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து ஜேசிபி மற்றும் டிராக்டரை கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த மகசர் சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டது. பின்னர் ஜேசிபி இயந்திரம், டிராக்டர் ஆகியவற்றுடன் டிராக்டரின் ஓட்டுநரை காவல் நிலையம் அழைத்து வந்தோம். நிலைய குற்ற எண். 49/2024 ல் 379 IPC r/w 21 (1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்து டிராக்டரின் ஓட்டுநர் மெர்வின் நீதிமன்ற காவலுக்கு

அனுப்பிவைத்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை..**

1. காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் இரவு 10.00 மணிக்கு சென்றோம். யார் யார் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் தலைமையில் நானும், தலைமை காவலர் ராமலிங்கம் என்பவரும் இரவு ரோந்துபணிக்கு சென்றோம். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் நானும், ஒரு இருச்சக்கர வாகனத்திலும், தலைமை காவலர் ராமலிங்கம் என்பவர் அவரது இருச்சக்கர வாகனத்திலும் சென்றோம்.

2. ரகசிய தகவல் எப்படி கிடைத்தது என்றால் காவல் உதவி ஆய்வாளருக்கு போன் மூலமாக கிடைத்தது. எனது விசாரணையில் ரகசிய தகவல் படி தான் ரோந்து பணிக்கு சென்றோம் என்று கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. முதலில் ஏரிக்குள் யாருடைய வாகனம் சென்றது என்றால் உதவி ஆய்வாளரின் வாகனம் முன்னே செல்ல ராமலிங்கத்தின் வாகனம் பின்னே சென்றது.

3. எத்தனை மணிக்கு சம்பவ இடமான ஏரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் அதிகாலை 1.00 மணிக்கு. காவலர் ராமலிங்கம் எத்தனை மணிக்கு சம்பவ இடமான ஏரிக்கு இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றால் எங்களுக்கு பின்னாலேயே அதிகாலை 1.00 மணிக்கு வந்தார். எதிரி மெர்வினை யார் எத்தனை மணிக்கு பிடித்தது என்றால் உதவி ஆய்வாளர் அதிகாலை 1.00 மணிக்கு பிடித்தார்.

4. கைப்பற்றுதல் மகசரை உதவி ஆய்வாளர் எத்தனை மணிக்கு தயார் செய்தார் என்றால் அதிகாலை 1.00 மணிக்கு தயார் செய்தார் . ரோந்து பணிக்கு நாங்கள் என்ன பொருட்களை எடுத்து சென்றோம் என்றால் நான் B.டிக்கட், நோட்புக் எடுத்து சென்றோம் . வெள்ளைதாள்களை எடுத்துசென்றோமா என்றால் 5 வெள்ளைதாள்களை உதவி ஆய்வாளர் எடுத்து வந்தார்.

5. எத்தனை வெள்ளைதாள்களை பயன்படுத்தினோம் என்றால் 3 தாள்களை பயன்படுத்தி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். லேப்டாப் , பிரிண்டர் எடுத்து சென்றோமா என்றால் இல்லை. எதிரி மெர்வினுக்கு சொந்தமான வாகனம் எது என்றால் டிராக்டர். எதிரி மெர்வினுக்கு சொந்தமான வாகனம் டிராக்டர் என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் டிராக்டரின் ஓட்டுநர் என்பதால்

உரிமையாளராக இருக்கலாம் என்று கூறினேன்.

6. கைப்பற்றிய டிராக்டரை யார் மூலம் காவல் நிலையத்திற்கு ஓட்டி வந்தோம் என்றால் எதிரி மெர்வின் தான் ஓட்டி வந்தார். அய்யப்பன் என்பவருக்கு சொந்தமான ஜேசிபி வாகனம் என்தற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. ஜேசிபி வாகனம் அய்யப்பன் என்பவருக்கு சொந்தமானது என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் ஜேசிபி வாகனத்தின் E-challan மூலம் பார்த்தோம்.

7. ஜேசிபி மற்றும் டிராக்டர் யாருடைய வாகனம் என்று எனக்கு உதவி ஆய்வாளர் சொல்லி தான் தெரியும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி மெர்வினை கைது செய்தது குறித்து மெரிவினின் உறவினர்களில் யாரிடம் தகவல் சொன்னோம் என்றால் மெர்வினின் அம்மாவிற்கு தகவல் சொன்னோம். மெர்வினின் அம்மாவிற்கு தகவல் சொன்னோம் என்ற விவரத்தினை எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் உதவி ஆய்வாளர் என்னிடம் என்ன கூறினாரோ அதை கூறினேன்.

8. உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் அய்யப்பன் விசாரணை செய்ததற்கான விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி மெர்வினிடம் உதவி ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றாரா என்றால் பெறவில்லை. ஏரியில் மண் அள்ளுவதாக யாருக்கு தகவல் கிடைத்தது என்றால் உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

9. பொதுபணி துறைக்கு சம்மந்தமான ஏரி என்பதால் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தோமா என்றால் இல்லை. எ.கோட்டை காவல் நிலையத்தில் எத்தனை ஆண்டுகள் பணி செய்தேன் என்றால் 3 வருடம். எதிரிகள் மீது எங்கள் காவல் நிலையத்தில் வேறு வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், மேற்படி வழக்கு சம்பவம் நடைபெற்றிருந்தால் நான் வாக்குமூலத்தில் கூறியதுபோல் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பேன் என்றாலும், காவல் நிலையத்தில் எழுத்தராக பணி செய்வதால் புள்ளிவிவர கணக்கிற்காக பொய் வழக்கு பதிவு செய்து, உதவி ஆய்வாளர் கேட்டுகொண்தற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. ஜேசிபி மற்றும் டிராக்டர் வாகனத்தின் உரிமையாளர்கள் என இவர்கள் பெயர் இல்லை என்றால் ஜேசிபி வாகனம் எதிரி பெயரில் தான் உள்ளது, டிராக்டர் வாகனம் மெர்வினின் உறவினர் பெயரில் உள்ளது.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.03.04 05:18:54 +0600

Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by E.veeramani